ஸம்புடம் 2. பரீதாபி ஐப்பசிமீ ஸஞ்சிகை 9

ஸ்ரீ:

# வேதாந்த தீபிகை

என்னும்

# ஸ்ரீ அஹோபில மட சிஷ்ய சபை பத்ரிகை.

ஸ்ரீ அஹோபில மட சிஷ்ய சபையின் காரியதரிசியால்,
ப்ரதி மாஸம் ப்ரசுரம் செய்யப்படும்.

கலாரத்நாகரம் அச்சாபீஸ், சென்னை.

வருஷம் 1-க்கு கட்டணம் ரூ. 2-0-0.] [ஒரு ஸஞ்சிகையின் விலை அணா 3.

# THE VEDANTA DIPIKA.

## A MONTHLY TAMIL JOURNAL

OF

## HINDU RELIGION AND PHILOSOPHY.

PUBLISHED BY THE GENERAL SECRETARY,

THE AHOBILA MUTT SISHYA SABHA.

Vol. 2 – No. 9.

*October 1912.*

## வேதாந்த தீபிகை

பரீதாபி ௵ ஐப்பசி ௴.


## விஷய ஸூசிகை.


பக்கம்.

1. ஸ்ரீ பாகவத தனிஸ்லோகீ
   ஸ்ரீமாந் சே. நரஸிஹ்மாசாரியர் ... ... 339.
2. பகவத்கீதா தாத்பர்யம்
   ஸ்ரீமாந். எஸ். கோபாலஸ்வாமி ஐயங்கார் ... 347.
3. விபீஷணர் சரணாகதியில் லக்ஷ்மணாபிப்ராயம்
   ஸ்ரீமாந். மையூர். வ. ஸ்ரீநிவாஸாசாரியர்] ... 358.
4. புஸ்தகவிமர்ஶம் ... ... ... ... ... 367.
5. கடிதங்கள் ... ... ... ... ... 369.
6. பத்ராதிபரின் குறிப்புகள் ... ... ... ... 374.



*Copy-right reserved.*

ஸ்ரீ:

ஶ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

# வேதாந்த தீபிகை

என்னும்

ஸ்ரீ அகோபிலமட ஶிஷ்யஸபை பத்ரிகை.

ஸம்புடம் 2.] பரீதாபி௵ ஐப்பசி௴ [ஸஞ்சிகை 9.

## ஸ்ரீபாகவத தனிஶ்லோகீ.

ஶ்ருத்வா குணாந் புவநஸுந்தர ஶ்ருண்வதாம் தே நிர்விஶ்ய கர்ணவிவரைர்ஹரதோऽங்கதாபம்। ரூபம் த்ருஶாம் த்ருஶிமதா மகிலார்த்தலாபம் த்வய்யச்யுதாவிஶதி சித்தமபத்ரபம் மே ॥ ஸ்ரீ பாகவதம், 10, 52, 37.

ஸ்ரீ க்ருஷ்ணபகவான், * "துவரிக்கனிவாய் நிலமங்கை துயர் தீர்ந்துய்யவும்," † "விண்கொளமரர்கள் வேதனைதீரவும், முன் மண்கொள் வசுதேவர்தம் மகனாய் வந்து திண்கொளசுரரைத்தேய வளர்ந்து" வரும்போது, "ராகவத்வேऽபவத் ஸீதா ருக்மிணீ க்ருஷ்ணஜந்மநி" என்றும், "யாந்யந்யாநி யதாஸ்வம் விஹரத:" என்றும், "யஜ்ஞவேஷஸ்வப்யமுஸ்வியே ஷட்கர்மணாம் ஹாவாம் ஸ்வயம் விஹர்த்ரீ" என்றும் சொல்லுகிறபடியே, பகவானுடைய அவதாரங்கள் தோறும் தானுமொக்க அவதரிக்கும் ஸ்வபாவமுடைய பெரியபிராட்டியும் இந்த ஸ்ரீ க்ருஷ்ணவதாரத்துக் கேற்றபடி

* பெரி - திரு. 8. 8. 9.

† பெரியா - திரு. 1. 3 16.

ஸ்ரீ ருக்மிணீதேவியாகக் குண்டிநபுரமென்னும் பட்டணமாண்டு வந்த பீஷ்மகர் என்ற ராஜாவுக்குப் புத்ரியாய் அவதாரஞ்செய்து, ஒருமகள் தன்னையுடைய அவரால் உலகம்நிறைந்த புகழால் திருமகள்போல வளர்க்கப்பட்டுவந்தாள். அப்போது தகப்பனர் ஸபைக்கு வருகிற ப்ராஹ்மணர்களால் புகழ்ந்து பேசப்பட்ட ஸ்ரீக்ருஷ்ணனுடைய திவ்யகல்யாண குணங்களையும் திவ்யஸௌந்தர்யத்தையும் ஸ்ரீ ருக்மிணீதேவி கேட்டு அந்தப்பகவானையே தனக்கு அநுரூபமான பதியாக நினைத்து, * "வாராளுமிளங்கொங்கை வண்ணம் வேறாயினவாறெண்ணாள், எண்ணில் பேராளன் பேரல்லால் பேசாள்" என்கிறபடியே, அவனிடத்திலேயே கரைபுரண்ட காதலுடையவளாயிருக்க, இதைக்கண்ட பீஷ்மகமஹாராஜனும்

† "நெஞ்சுருகிக் கண்பனிப்ப நிற்கும் சோரும்
நெடிதுயிற்கு முண்டறியா ளுறக்கம் பேணாள்
நஞ்சரவிற் றுயிலமர்ந்த நம்பீ யென்னும்
வம்பார்பூம் வயலாலி மைந்தா வென்னும்
அஞ்சிறைய புட்கொடியே யாடும் பாடும்
அணியரங்க மாடுதுமோ தோழீ யென்னும்
என்சிறகின் கீழடங்காப் பெண்ணைப் பெற்றேன்
இருநிலத்தோர் பழிபடைத்தே னேபாவமே"

என்று சிந்தார்ணவகதராய், ‡ "தந்தையும் தாயு முற்றாரும்நிற்கத் தனிவழி போயினா ளென்னும் சொல்லு வந்த பின்னைப் பழிகாப்பதரி" தாகையால் நாமேயிவளை ஸ்ரீக்ருஷ்ணனுக்கு நல்லதோர் கண்ணாலம் செய்துகொடுக்க வேண்டுமென்று சொல்லிக்கொண்டிருக்கும் போது, ஆஸுரப்ரக்ருதி யாகையால் கம்ஸபக்ஷத்தைச் சேர்ந்தவனும் ஜந்மஸித்தமான க்ருஷ்ண த்வேஷமுள்ளவனுமிருந்த ருக்மியென்கிற மூத்தகுமாரன் க்ருஷ்ணனைப் பலவாறாகத் தூஷித்து ருக்மிணியை சிசுபாலனுக்குக் கொடுக்க வேணுமென்று நிர்ப்பந்திக்க, பீஷ்மகரு மதற்கிசைந்து விவாஹ ஸந்நாஹங்களைச் செய்தார். இந்த வ்ருத்தாந்தத்தை ஸகிகளால் சொல்லக்கேட்ட ருக்மிணிதேவியும் மிகவும் மநம்நொந்து,

* பெரி - திரு. 5. 5. 7.
† திருநெடு. 12.
‡ நாச் - திரு. 12. 3

* "வாளாய கண்பனிப்ப மென்முலைகள் பொன்னரும்ப
நாணாளும் நின்னினைந்து நைவேற்கோ மண்ணளந்த
தாளாளா! தண்குடந்தை நகராளா! வரையெடுத்த
தோளாளா! என்றனக்கோர் துணையாள னாகாயே."

என்று பிரார்த்தித்துக் கொண்டிருந்தாள்.

அவ்வளவில், நெடுநாள் தன்னிடத்தில் பழகினவராய் மிகவும் தனக்கு ஆப்தரான ஒரு வ்ருத்தப் பிராஹ்மணர் வரக்கண்டு அவரை ருக்மிணி,

† "வேங்கடத்துச்
செங்கண்மால் சேவடிக்கீ ழடிவீழ்ச்சி விண்ணப்பம்
கொங்கைமேல் குங்குமத்தின் குழம்பழியப் புகுந்தொருநாள்
தங்குமே லென்னாவி தங்குமென் றுரையீரே"

‡ 'என்காத லென்துணைவர்க் குரைத்தி யாகில்
இதுவொப்ப தெமக்கின்ப மில்லை'

என்று பிரார்த்திக்க, அவரும் ஒப்புக்கொள்ளவே, ஏழு ப்லோகங்களை எழுதிப் பத்ரிகையைப் பிராஹ்மணர் கையில்கொடுத்தாள். அவரும் அதை எடுத்துக்கொண்டு த்வாரகைக்குச்சென்று ஸ்ரீ க்ருஷ்ணனை அணுகி, அவரால் யதார்ஹம் பூஜிக்கப்பட்டு, இளைப்பாறினபிறகு, ஸ்ரீ க்ருஷ்ணனால் வந்தகாரணத்தைக் கேட்கப்பட்டார். அதற்கவர்,

𑌰𑍁𑌕𑍍𑌮𑌿𑌣𑍍𑌯𑌾 𑌪𑍍𑌰𑍇𑌷𑌿𑌤𑍋𑌽𑌹𑌂 𑌸𑌕𑌾𑌶𑌂 𑌪𑍁𑌰𑍁𑌷𑍋𑌤𑍍𑌤𑌮 ।
𑌤𑌸𑍍𑌯𑌾𑌸𑍍𑌸𑌨𑍍𑌦𑍇𑌶𑌵𑌾𑌕𑍍𑌯𑌾𑌨𑌿 𑌕𑍍𑌰𑌿𑌯𑌤𑌾𑌂 𑌤𑌦𑌨𑌨𑍍𑌤𑌰𑌂 ॥

"உம்மிடத்தில் ருக்மிணியால் அனுப்பப்பட்டு வந்தேன். அவள் சில சமாசாரங்களை எழுதியனுப்பியிருக்கிறாள். அதைக் கேட்டவநந்தரம் செய்யலாம்" என்று சொல்லிப் பத்ரிகையைத் திருவடியில் ஸமர்ப்பித்தார். 'நீரே இதைப்படியு' மென்று பெருமாள் நியமிக்க, ப்ராஹ்மணர் பத்ரிகையில் எழுதியிருக்கும் ப்லோகங்களை விண்ணப்பம் செய்கிறார். அவைகளில் '𑌶𑍍𑌰𑍁𑌤𑍍𑌵𑌾 𑌗𑍁𑌣𑌾𑌨𑍍' என்பது முதல் ப்லோகம்.

---

* பெரி - திரு. 3. 6. 5.
† நாச் - திரு. 8. 7.
‡ திருநெடு. 27.

இதில், ஒருபெண் முற்பட முகமறியாத புருஷனிடத்தில் லஜ்ஜாபயங்களைவிட்டுத் தன்னபிப்பிராயத்தை வெளியிடுவது ஸாஹஸக்ருத்யமன்றோ, என்கிற சங்கையைப் பரிஹரிக்கிருள். ஹெ ஹுவநஸுஂஃர - லோகங்களுக்குள் அழகுள்ளவனே. லோகங்களுக்குள் அழகுள்ளவனென்று ப்ரஸித்தனான மன்மதனுங்கூட 'ஸுஂமாஉஂமாதஂஹவஸி' என்கிறபடி உம்முடைய அவயவங்களின் ஏகதேசத்தின் ஸம்பந்தத்தினல் அவ்விதமாய் பிரஸித்தியடைந்தவ னன்றோ ? என்று தாத்பர்யம். * 'அழகியான்தானே அரியுருவன்தானே' என்ருர்களிறே. ஶ்ருணதாஂ - கேட்பவர்களின். ககணவிவரை: - காதுகளின் த்வாரங்கள் வழியாய். நிவிஶ்ய - உள்புகுந்து. 'ஶ்ருணோதி தத்வணஸ்யாஸஸகண:' என்றும், † 'கேளாச்செவிகள் செவியல்ல கேட்டாமே' என்றுமிருப்பதால், பகவத்குணங்களைக் கேட்காதசெவிகள் செவிகளல்ல, அவைகளைக்கேட்கும் செவிகளே கர்ணவிவரங்கள், என்றதாயிற்று. ஸுஂம தாவஂ - சரீரத்தினுடைய எல்லாதாபத்தையும். அன்றிக்கே, 'ஸுஂம' என்பது ஸம்புத்தியாய், ஹே க்ருஷ்ண, தாவஂ - ஸஂஸாரத்தி லுண்டான தாபத்தை, என்னவுமாம். ஹரத: - போக்குகிற, ‡ 'நமனும் முற்கலனும்பேச நரகில் நின்ருர்கள் கேட்க, நரகமே சுவர்க்கமாகும் நாமங்களுடைய நம்பி' என்கிறபடியே, பகவத்குணங்கள் கேட்கப்பட்டால் தாபங்கள் தாமே நிவ்ருத்தங்களாகும், என்றதாயிற்று. ¶ 'அடியார் படுதுயராயின வெல்லாம், நிலந்தரஞ்செய்யும்' என்கிறபடியே அவனுல் பெறுவதெல்லாம் அவனுடைய குணநுஸந்தாநத்தால் பெறலாமிறே. ஆகையாலிறே, திருநாமம் பணிப்பொன், அவன் கட்டிப்பொன், என்று நம்பூர்வர்களின் வார்த்தை. + 'அரியென்றபேரரவம், உள்ளம்புகுந்து குளிர்ந்து' என்கிறபடியே களர்பிளந்தவிடத்தில் ஒருபாட்டம் மழைவிழுந்தாற்போல் தாபங்களைமாற்றி உள்ளத்தைக் குளிரச்செய்யும் என்றதாயிற்று. அன்றிக்கே,

---

* நான்முகன்திருவந். 22.
† பெரி - திரு. 11. 7. 2.
‡ திருமாலை. 12.
¶ பெரி - திரு. 1. 1. 9.
+ திருப்பாவை. 6.

'ஹரிஹாரதிவாவாமி ஊஷுவிதைாவி ஸுதஃ' என்கிற படியே, ஸம்ஸாரிகளின் ஸகல துக்கங்களையும் போக்கடிக்கும், என்றுகவுமாம். அன்றிக்கே, தகப்பனுர் ஸதஸ்ஸில் பிராஹ்மணேத் தமர்கள் சொல்லக்கேட்டதுமுதல் அந்தக் குணங்கள் தனக்கு ரஸித்தபடியைச் சொல்லுகிருளாகவுமாம். தெ - உம்முடைய.

'ஙுணாயத்தம் லொகெ ஙுணிஷு ஹி ஶுதம் ஶுஙலவஷு விவயூஸம் ஹஷிக்ஷிதியாவதெ தத்ஷயிவாநஃ । ஙுணாஸஹ ஜ்ஞாநவுஹாதய உதகூஜதயா ஸமீஹியம யாதாஃ ஜதி ஹி நிவெணஷ ஶுதிவஶாக ॥ (உலகத்தில் குணவான்களுக்கு மாங்கள்யம் குணங்களால் உண்டாகும். உம்விஷயத்தில் இது விபரீதமாயிற்று. ஏனென்ருல், ஸத்யம், ஜ்ஞாநம் முதலானகுணங்கள் உம்மையடைந்ததால் சுபங்களாயின வென்று ச்ருதிசொல்லுகிறது.)

என்கிறபடியே, பொன்னுமா யிராவிஞப்போலே, அந்தக் கல்யாண குணங்களுக்கும் மேன்மையைக் கொடுக்கக் கூடிய ஸ்வரூப கௌரவத்தை யுடைய உம்முடைய, என்றதாயிற்று. தேஙுணாநு - உம்முடைய குணங்களை. குணங்களும் உம்முடைய தாகையாலேயே எனக்கு ரஸித்தன வத்தனைபோக்கி குணவாஞகையாலே நீர் ரஸித்தீர் என்பதில்லை, என்று தாத்பர்யம். 'சுஙுணாநு' என்று பதத்தைப்பிரித்துக் கொள்ளவுமாகும். அப்பொழுது, * 'குரவையாய்ச்சியரோடு கோத்ததும்' என்பது முதலான உம்முடைய விசித்ர ஸ்வபாவங்களை, என்றதாயிற்று. † 'கடியன் கொடிய னெடியமா லுலகங்கொண்ட வடியன் அறிவருமேனிமாயத்தன் ஆகிலும் கொடியவென் னெஞ்சமவனென்றே கிடக்கும் மெல்லே' என்றும், ‡ 'என்கண்ணன்கள்வம் எனக்குச் செம்மாய் நிற்கு' மென்றும் சொல்லுகிறபடியே நீ முலையடியே நடந்து திரிந்தபடியை யநுஸந்தித் தென்ருகவுமாம். அதுவுமன்றிக்கே, சக்ரவர்த்தித் திருமகனைப்போல், 'ந ஶாஃ வாஷாஶாநு வெ வக்ஷாஹூா ஶவி வஶுதி' என்கிறபடியே ஏகதார

* திருவாய். 6. 4. 1.

† திருவாய். 5. 3. 5.

‡ திருவாய். 9. 6. 6.

2.96



வ்ரதமன்றிக்கே, * 'தொடுவேசெய்திள வாய்ச்சியர் கண்ணினுள் விடவேசெய்து விழிக்கும்பிரான்' என்கிறபடியே, யதாபூர்வ வ்யாபாரங்களைச் செய்தபடியை, என்றாகவுமாம். இத்தால் ஊர்ப்பொது எனக்குக் கிடைக்காமற்போவதோ, என்றாளாயிற்று.

சக்ஷுஷ்மதாம் - கண்படைத்தவர்களின். சக்ஷுஷாம் - கண்களுக்கு. அகிலார்த்தலாபம் - ஸர்வ ப்ரயோஜநங்களின் லாபமாயிருக்கிற. ரூபம் - உம்முடைய ஸௌந்தர்யத்தையும். ஶ்ருத்வா - கேட்டு. 'ததேவ யத் த்ருஶ்யதி தஸ்ய சக்ஷு:' என்றும், † 'காணாதார் கண்ணென்றும் கண்ணல்ல கண்டாமே' என்றும் சொல்லுகிறபடியே, பகவானுடைய திவ்யரூபத்தைப் பார்த்தவர்களே கண் படைத்தவர்கள், மற்றவர்கள் கண் படைத்தவர்க ளல்ல, என்று தாத்பர்யம். அவனைப்பார்த்த மாத்ரத்தில், 'பித்யதே ஹ்ருதயக்ரந்தி: சித்யந்தே ஸர்வஸம்ஶயா: । க்ஷீயந்தே சாஸ்ய கர்மாணி' என்றிருப்பதால், அவனைப்பார்ப்பதே ஸர்வபுருஷார்த்தங்களுக்கும் காரணம், என்று தாத்பர்யம். அன்றிக்கே, ‡ 'பாவிநீயென்றொன்றுசொல்லாய் பாவியேன் காணவந்தே' என்றும், ¶ 'ஓருநாள் காணவாராயே' என்றும் சொல்லுகிறபடியே, அவனைக் காண்கையே ஸர்வ புருஷார்த்தலாபம், என்றாகவுமாம்.

அச்யுத - நழுவவிடாதவரே. உம்மை யடைகிறவர்களை ஒருநாளும் நழுவ விடுகிறதில்லை யென்கிற உம்முடைய திருநாமத்தை யதார்த்தமென்றெண்ணி நான் உம்மை ஆச்ரயிக்கிறேன், என்கிறாள். + 'தம்மை யுகப்பாரைத் தாமுகப்ப ரென்னும்சொல், தம்மிடையே பொய்யானாற் சாதிப்பாராரினியே', உம்முடைய பேரும் உம்முடைய வார்த்தையும் மெய்யாக வேண்டிற்றாகில் நீர் என்னைக் காப்பாற்றவேண்டிய தவஶ்யம். அப்படிக் கில்லா விட்டால்,

---

* திருவாய். 1. 7. 5.
† பெரி - திரு. 11. 7. 1.
‡ திருவாய். 4. 7. 3.
¶ திருவாய். 8. 5. 1.
\+ நாச் - திரு. 11. 10.

ஹொஜவ ஸாகுர வொஹொ
ஸாகுர வஹிநீ தாரிஸஂ தஹ வசநஂ।
(ஹவெதுஷ ஸாமரவொஷ
ஷாமரவஹிநெ தாஜஶஂ தவ வவநஂ।)

என்கிறபடியே, மெய்ம்மைபெரு வார்த்தைகளாகிற உம்முடைய ‘ப்ரியோஹி ஜ்ஞாநிநோத்யர்த்தமஹம் ஸ ச மம ப்ரிய:’ ‘கௌந்தேய ப்ரதிஜாநீஹி ந மே பக்த: ப்ரணஶ்யதி’ இத்யாதிகளும் ஸமுத்ர கோஷங்களைப்போல் நிரர்த்தங்களாய், உம்முடைய அச்யுதன் முதலிய திருநாமங்களும் மஹாவ்ருக்ஷ ஸமாக்யை உபாதியாய் விடும், என்று கருத்து. அன்றிக்கே, உம்மைச் சேர்ந்தவர்கள் திரும்பி வருவதுண்டோ? ‘ந ச புநராவர்த்ததே’, * ‘போயினற்பின்னை யித்திசைக்கென்றும் பிணைகொடுக்கிலும் போகவொட்டாரே’, ‘யாம் ப்ராப்ய ந புநர் ஜந்ம தா ஷ்யஷ்ரஷ்யாவி ந நிவர்த்ததே’ இத்யாதிகளைக் கண்டிருந்தும் என்னுடைய மனஸ்ஸு உம்மிடத்தில் ப்ராவண்யத்தை யடைந்ததே. இனி அது நமக்கு ஸ்வாதீந மாகுமோ, என்கிருளாகவுமாம்.

† ‘மடநெஞ்ச மென்றுந் தமதென்று மோர்கரு மங்கருதி
விடநெஞ்சை யுற்ருர் விடவோ வமையுமப் பொன்பெயரோன்
தடநெஞ்சங் கீண்ட பிராஞர் தமதடிக்கீழ் விடப்போய்
திடநெஞ்ச மாயெம்மை நீத்தின்று காறுந் திரிகின்றதே’

என்கிறபடியே, இவ்வளவு நான் பழகித்திரிந்த எம்மையும் மறந்து தம்மையும் மறந்து தாம்வந்த கார்யத்தையும் மறந்து அவனிடத்தில் ஏகீபவித்துவிட்டதே. ஆகையால், ‘அச்யுத’ - தன்னை யடைந்தவர்களை நழுவவிடாதவனே, என்கிருளென்ருகவுமாம். ‡ ‘ஆய்மிகு காதலோடு யானிருப்ப யான் விடவந்த வென்தூதியோடே, நீ மிகுபோகத்தை நன்குகந்தாய் அதுவுமுன் கோரம்புக்கேற்கும்’ என்கிருள்.

அபத்ரபம் - லஜ்ஜையைவிட்டு உன்னை வந்தடைந்தது. அதாவது, அவன் நெஞ்சம் கீண்டபிரான் என்பதையும் மறந்து,

* பெரியா - திரு. 4. 5. 2
† திருவிரு. 46.
‡ பெருமா - திரு. 6, 4.

ஸ்த்ரீகளுக்கு அவசியம் வேண்டுவதும் ஸ்வாபாவிகமுமான லஜ்ஜையையும் விட்டது. நான் என்நெஞ்சத்தைப் பறிகொடுத்ததோ பாதி, தானும் தன் லஜ்ஜையைப் பறிகொடுத்தது என்கிருள். ஹ்ருதம் - என்று நபும்ஸகமாகச் சொன்னதால், 'நவாம்ஸகஸ்ஸீதி ஜ்ஞாத்வா தம் வ்ரதி வ்ரஷிதம்ஸ்ந: | தத்ர தஸ்மைவ ரமதே ஹதா: வாணிநிநா வயம்' என்பதுபோலாயிற்று, என்கிருள். அதாவது, நபும்ஸகமென்று தூதுவிட்டோம். அதுவும் நம்மைப் போலவே லீலாரஸத்தை அனுபவியா நின்றது. பாணிநி சொன்னதை நம்பி மோசம் போனேம், என்கிருள். க்ஷயஹ்ராவிஸதி - உம்மிடத்தில் ப்ரவேசித்து விட்டது. அகாதமான கடலில் முழுகினவஸ்து இனி நம்மால் கண்டெடுக்கப்போமோ? நீரும் கடல்வண்ணனல்லவோ? 'ஸமுத்ர இவ காம்பீர்யே' என்றல்லவோ உம்மையும் சொல்லுகிறது. உம்மை ஆச்ரயித்தவர்களை 'வாரம் ஸாகரமேவ' என்றல்லவோ ச்ருதி சொல்லுகிறது. அப்படி உம்மிடம் ப்ரவேசித்த வஸ்து நம்மால் கண்டுபிடிக்கப் போமோ, என்கிருள்.

இத்தால்,

* 'பேரெயில் சூழ்கடல் தென்னி லங்கை
செற்றபிரான் வந்து வீற்றி ருந்த
பேரையிற் கேபுக்கென் னெஞ்சம் நாடிப்
பேர்த்துவர வெங்குங் காண மாட்டேன்
ஆரையி னியிங்கு டையம் தோழி
என்னெஞ்சங் கூவவல் லாரு மில்லை
ஆரையி னிக்கொண்டென் சாதிக் கின்ற
தென்னெஞ்சம் கண்டது வேகண் டேனே'

என்கிறபடியே, என்னெஞ்ச மவரால பகரிக்கப் பட்டது. இனி மீளப் போகிறதில்லை. இனிநெஞ்ச மில்லாமல் என்னால் செய்யலாவ தொன்றுமில்லை. ஆகையால், அடங்காப் பெண்ணைப் பெற்றவள் பெண்ண பிப்ராயத்தைத் தானநுசரிக்குமாப் போலே நெஞ்சம்போன விடத்தே நானு மநுஸரித்தேன்.

ஆகையால் என்னிடத்தில் தோஷக்ரஹணம் பண்ணவழியில்லை என்கிருளாயிற்று.

சே. நரஸிஹ்மாசாரியர்.

---

* திருவாய். 7. 3. 7.

299

ஶ்ரீ:

# புஸ்தக விமர்ஶம்.

விவாஹகால விமர்ஶம்—இந்தப்பெயர்கொண்ட ஓர் க்ரந்தம் ஸம்ஸ்க்ருதபாஷையில் மைலாப்பூர். ஸம்ஸ்க்ருதகாலேஜ் - தர்மஶாஸ்த்ர பண்டிதர் ப்ரஹ்மஶ்ரீ. டி. வி. ஶ்ரீநிவாஸ ஶாஸ்த்ரிகளவர்களால் ரசநம் செய்யப்பட்டு நாகர எழுத்தில் சென்னை ஆநந்த அச்சாபீஸில் அச்சிடப்பட்டு நம்முடைய விமர்ஶத்துக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. தென் இந்தியா விவாஹச்சீர்திருத்தத்துக்காக ஏற்பட்டிருக்கும் சபையார் வேண்டுகோளின்பேரில், ருதுமதீ விவாஹம் ஶாஸ்த்ரீயம் என்கிற நிர்த்தாரணம் ஸப்ரமாணமாய் இந்தக்ரந்தத்தில் செய்யப்பட்டிருக்கிறது. 64 - பக்கங்களடங்கிய இந்தக்ரந்தத்தில் விஷயம் மூன்று பரிச்சேதங்களாகப் பிரிக்கப்பட்டு முதலில் ஸ்ம்ருத்யேக[illegible]கயும், இரண்டாவதில் ப்ரத்யேகம் ஸ்ம்ருத்யபிப்ராயமும், மூன்ற[illegible]க்ருஹ்ய ஸூத்ரார்த்தங்களும், செவ்வையாய் விசாரிக்கப்பட்டிருக்[illegible]. இந்த க்ரந்தத்துக்கு அனுபந்தமாக 88 - பக்கங்களில், விவாஹஸம்[illegible]ன ஆபஸ்தம்ப போதாயநாதிகளான 13 - க்ருஹ்யஸூத்ரங்களும் முக்யமானவைகளுக்கு பாஷ்யங்களும், மநுபோதாயநாதிகளான 23 - ஸ்ம்ருதிகளிலிருந்து வசநங்களும், ஹேமாத்ரி, பராஶரமாதவீயம் முதலான 7 - நிபந்தந க்ரந்தங்களிலிருந்து வாக்யங்களும், சேர்த்து அச்சிடப்பட்டிருக்கின்றன. கொஞ்சம் விஸ்தாரமாய் எல்லாவிஷயங்களுக்கும் ஒரு விஷயஸூசிகையையும்சேர்த்து, அசுத்தங்களும் குறைவாய் ஏற்பட்டிருந்தால் இந்த பரிச்ரமம் இன்னமும் ஶ்லாக்யமாக இருக்கும். ஆகிலும் இவ்வளவு மூலவசநங்களையும் பக்ஷபாதமில்லாமல் ஒருங்கு சேர்த்திருப்பதே பரமோபகார மென்று எண்ணவேண்டும். தத்காலம் ருதுமதீ விவாஹவிஷயமாய் ஏற்படும் விவாதங்களுக்கு இப்படிப்பட்ட மூலவசநஸங்கலநம் ப்ரதமாபேக்ஷிதமென்பதில் சந்தேகமில்லை. இவ்வளவு பரிச்ரமத்தை வஹித்த ஶாஸ்த்ரிகளுக்கும் அவரை ப்ரேரித்த சபையாருக்கும் எல்லாரும் க்ருதஜ்ஞதை பாராட்டவேண்டியது கடமையாகிறது.

இந்த க்ரந்தத்தின் மூடிவான அபிப்ராயம் இதில் 8 - வது பக்கத்தில் விவரிக்கப்பட்டிருக்கிறது. அதாவது, ரஜோதர்ஶநம் வரைக்கும் கந்யைகளின் விவாஹத்துக்கு முக்யகாலமென்றும், அதற்குப்பிறகு மூன்றுவருஷம் வரையில் களணம் அல்லது முக்யமல்லாத காலமென்றும், அதற்குப்பிறகு பிதாமுதலியோருக்கு தாநாதிகாரமில்லையென்றும் கந்யகையே ஸ்வயம்வரம்செய்து கொள்ளலாமென்றும், அதுவும் ருதுவாகி 4-வது வர்ஷத்தில்தான் கந்யைசெய்யக் கூடுமென்றும், அதற்குப்பிறகுதான் விவாஹமாகாத த்விஜ

கந்யை 'வ்ருஷலீ' என்று பெயருள்ளவளா யாகிருளென்றும் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. மேலும் ருதுவானபிறகு நாலுவருஷம் வரையில் செய்யும் விவாஹமும் தர்மார்த்தமான விவாஹமென்றும், அதற்குப்பிறகு விவாஹமாகாவிட்டால் தான் கந்யை, பிதா இவர்களுக்குத் தோஷமென்றும், நிந்தாவசநங்களெல்லாம் இந்த தாத்பர்யத்துடன் அர்த்தஞ்செய்யப்படவேண்டுமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஸ்ம்ருதிகளில் களணமென்று சொல்லப்படும் ப்ரளடா விவாஹமே க்ருஹ்ய ஸூத்ரங்களின் அபிப்ராயத்துக்கு ஏற்றவைகளென்று சொல்ல இடமுண்டாகிலும், கேவலம் க்ரமங்களையும் கல்பங்களையும் உபதேசிக்கவந்த ஸூத்ரங்களைக்காட்டிலும் இதம்பரமாய் விதிநிஷேதங்களைச்செய்யும் ஸ்ம்ருதிகளே ப்ரபலம் என்று சொல்லவேண்டியதாகையால் ப்ரௌடாவிவாஹம் கௌணகல்பமாகத்தான் சொல்லப்படக்கூடும் என்றும் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

இந்த நிர்ணயங்களுக்கு யுக்திகளும் பூர்வபக்ஷங்களின் கண்டநயுக்திகளும் எழுதப்புகுந்தால் விஸ்தரிக்கு மாகையால் இந்தக்ரந்தத்தைத்தருவித்து அந்தயுக்திகளை ஆஸ்தையுள்ள எல்லோரும் அறிந்துகொள்ள வேண்டியது.

சாஸ்த்ர ப்ராமாண்யத்தில் ருசியுள்ள எல்லாவைதிகர்களும் லௌகிகர்களும் இந்தக்ரந்தத்தை ச்ரத்தையுடன் வாங்கிப்பார்த்து அதின்நிர்ணயங்களின் யுக்தாயுக்தங்களையறிந்துகொள்ள வேண்டியது ஆவஶ்யகம். போ... த்ரப்ராமாண்யத்தை யபேக்ஷிக்காமலே விவாஹ சீர்திருத்தங்கள் செய்யப்படவேண்டுமென்று சிலரும், தமக்கு சாஸ்த்ரங்களில் ச்ரத்தையில்லாவிடினும் அதில் ச்ரத்தையைப் பாராட்டும் மந்தமதிகளைத்திருப்ப சாஸ்த்ரங்களும் இப்படிப்பட்ட கார்யங்களை அநுமதிக்கின்றன வென்று ரூபிப்பது ஸமர்த்தமான மார்க்கமென்று சிலரும் எண்ணுமிக்காலத்தில், ருஜுவாய் ஶாஸ்த்ர ப்ராமாண்யத்தை ஒப்புக்கொண்டு, ஶாஸ்த்ர ஸம்பிரதிபந்நமான வ்யவஸ்தா ப்ரகாரங்களை அவலம்பிக்கும் இந்தக்ரந்தம் எல்லாவைதிகர்களாலும் அவஶ்யமாய் அபிநந்தநீயந்தான். இதின் நிர்ணயங்கள் தங்களுக்கு ருசிக்கவில்லை யென்ற காரணத்தால், இதின் ரசனையில் வ்யக்தமாயிருக்கும் குணங்களை ஒருவரும் உபேக்ஷிக்கலாகாது. அதாவது, லளிதமாயும் யாவதுபயுக்தவத மாயுமுள்ள வாக்யரசனையும், ஸங்கோசமில்லாமல் பூர்வபக்ஷோபந்யாஸமும், கொஞ்சமேனும் ஆக்ரஹம், ஸம்ரம்பம், கடுசப்தம், முதலான தோஷங்களில்லாமல் ஸ்வமதோபந்யாஸமும், மீமாம்ஸைமுதலான சாஸ்த்ர பரிசயத்தினுல் சிக்ஷிதமான புத்திகௌசலமும், ஆகிய குணங்கள் இந்தக்ரந்தத்தில் நன்ருய்க் காணப்படுகின்றன.

இந்தக்ரந்தம் ப்ரஹ்மஸ்ரீ. கணபதி சாஸ்த்ரிகளின் "வயோநிர்ணய" க்ரந்தத்துக்குக் கண்டநமாகையால் அதையும்சேர்த்து இத்துடன் படிப்பது உசிதம். இவ்விரண்டில் எது யுக்தமென்கிற விஷயத்தில் பண்டிதர்களே ப்ரமாணம்.

☞ [கடிதங்கள் எழுதுகிறவர்களுக்கு அறிக்கை.—கடிதங்கள் எழுதுகிறவர்களின் அபிப்ராயங்களுக்குப் பத்ராதிபர் உத்தரவாதமில்லை. கடிதங்கள் நல்ல காகிதத்தில் ஒருபக்கத்தில் தெளிவாக எழுதப்படவேண்டும். எழுதுகிறவர்கள் பெயரும் விலாஸமும் பத்ராதிபருக்கு வ்யக்தமாய் அறிவிக்கப்படவேண்டும்.
வேதாந்ததீபிகை பத்ராதிபர்.]

ஸ்ரீ:.

# கடிதங்கள்.

## (1)

## நம்மாழ்வார் என்னும் திருநாமம்.

ஸ்ரீ வேதாந்ததீபிகை பத்ராதிபருக்கு,

சென்ற ஸஞ்சிகையில் 326-ம் பக்கத்தில் ஸ்ரீ ஶடகோபனுக்கு நம்மாழ்வார் என்கிற திருநாமம் உண்டானதற்குக் காரணமாய் முன் ஒருஸஞ்சிகையில் எழுதியிருந்த ஐதிஹ்யம் ஸ்ரீ நிகமாந்த தேசிகன் ஸ்ரீஸூக்திக்கு விருத்தமானதினால் எப்படி உபபந்நமாகு மென்று கேட்கப்பட்டிருக்கிறது. அதற்கு இங்கே எழுதியிருப்பதே ப்ரமாணிகமான ஸமாதானமாய்த்தோன்றுகிறது.

1. ஸ்ரீ தேசிக ஸூக்திகளில் சிலஇடங்களில் 'நம்மாழ்வார்' என்றும், ஸம்ப்ரதாயபரிசுத்தி, ரஹஸ்யத்ரயஸாரம் முதலான சில இடங்களில் 'ஆழ்வார்' என்றும் இருக்கிறது. ஆறாயிரப்படியிலும் முப்பத்தாறாயிரப்படியிலும் பஹுதரமாய் ஆழ்வாரென்றே காணப்படுகிறது. அபாதிதமான ஐதிஹ்ய ப்ரமாணாநுகுணமாய் முன் ஆழ்வார் என்றே திருநாமமிருந்திருக்கவேண்டும்.

2. முனித்ரயம், மடம் ஆகிய இரண்டு ஸம்ப்ரதாயங்களிலும் ஆசார்ய புருஷர்களின் பரம்பரையிலும் ஸ்ரீ ஆதிவண்சடகோப ஸ்வாமியினுடைய தனியனை அநுஸந்திக்காதவர்களில்லாததினால் அவர் நியமநத்தை அநுஸரித்து அச்சுக்ரந்தங்களிலும் மற்றக்ரந்தங்களிலும் நம்மாழ்வார் என்று எழுதப்பட்டிருப்பது ஒருவருக்கும் பாதகமாகாது.

3. மேலும் ப்ராசீன ஏட்டுக்ரந்தங்களில் ஆழ்வார் என்று இருந்து பிற்தின ப்ரதிகளில் நம்வாழ்வார் என்று மாற்றப்பட்டிருக்கிறதென்று சொல்

வதும் அஸம்பாவிதமில்லே. இப்போது க்ரந்தங்களுக்கும் முன்க்ரந்தங்களுக்கும் அனேகபாடபேதங்கள் ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரத்திலேயே காண்கிறோம்.

4. தவிரவும், 'நம்மாழ்வார்' என்றே ஸ்ரீதேசிகஸூக்தி இருந்ததென்று நிர்ப்பந்தமாய்ச் சொன்னாலும், அதனால் மேற்சொன்ன ஐதிஹ்யத்துக்கு யாதொரு அநுபபத்தியுமில்லே. அதெப்படியென்றால், ஸ்ரீதேசிகன் பிரபன்னஸந்தான கூடஸ்தராயும் குருபரம்பரா ப்ரதாநராயுமுள்ள ஆழ்வாரிடத்தில் ஆதராதிசயத்தால் 'நம்பாணநாத' னென்று அதிகாரஸங்க்ரஹத்தில் ஸாதித்ததுபோல், 'நம்மாழ்வார்' என்று அருளிச்செய்திருக்கலாம். பிறகு, ஸந்நிதிகுருபரம்பரை 19 - வது பக்கத்தில் எழுதியிருக்கிறபடி, ஸ்ரீ ஆதிப்பிரான்ஸியமனத்தால், 'நம் ஆழ்வார்' என்று ஸ்ரீ ஆதிவண் சடகோபஸ்வாமியால் யௌகிகமாய் ஸாதிக்கப்பட்ட திருநாமமே யோகரூடமாய் ஆகிவிட்டதென்பதே உசிதமான ஸமாதானம். இப்போது அச்சிடப்பட்டிருக்கும் ஸந்நிதிகுருபரம்பரை க்ரந்தமும் ப்ராசீனமான கருடகிரி துர்யவைபவமென்கிற பெரிய குருபரம்பரா ப்ரபாவத்தை அநுஸரித்த தாகையால் இதிற்கண்ட ஐதிஹ்யத்தில் அப்ராமாண்யபுத்தி சரியானதல்ல.

5. ஸ்ரீ தேசிகன்காலத்துக்குமுன் ஆழ்வாருக்கு நம்மாழ்வார் என்று திருநாமம் சாத்தப்பட்டதாய் வேறு ஐதிஹ்யமொன்றிருப்பதாகத் தெரிந்தாலொழிய, ஸ்ரீ ஸந்நிதி குருபரம்பரையில் கண்ட ஐதிஹ்யம் அமூலமென்றுசொல்ல ந்யாயமில்லே.

புத்தங்கோட்டகம் ஸ்ரீநிவாஸாசாரியர்.

---

(2)

## ஓர் நல்ல தர்மம்.

ஸ்ரீவேதாந்ததீபிகை பத்ராதிபருக்கு,

விசேஷமாய் ப்ராசீனவித்யைகளை அநாதரிக்கும் இந்தக்காலத்தில் மிகவும் ஆஸ்திகர்களான இரண்டுபேர்கள் செய்துவரும் அடியில்கண்ட தர்மத்தை வேதாந்ததீபிகையில் ப்ரசுரம் செய்யும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

செங்கற்பட்டுஜில்லா பென்னலூர் க்ராமத்திலிருக்கும் வரதப்பநாயுடு என்னும் ஓர் குடும்பியான வைஷ்ணவாபிமானி, சின்னகாஞ்சீபுரம் யதோக்

தகாரி வீதியிலிருக்கும் மதுராந்தகம் ஸ்ரீ. சடகோபாசார்யர் என்னும் ஸ்வாமியிடம் ஸமாச்ரயணம், ஸம்ப்ரதாய ஜ்ஞாநம், முதலானதுகளைப்பெற்று அந்த க்ருதஜ்ஞதையால், தன்னுடையதான சுமார் 11½ - ஏகர் நிலத்தையும் ரொக்கத்தையும் சேர்த்து ரூ. 10000 – வரையில் பெருமான ஸொத்துக்களைத்தன் ஆசார்யரான சடகோபாசார்யர் ஸ்வாமியிடம் ஸமர்ப்பித்துச் சென்ற ஜூலை மீ த்தில் தானசாஸநமும்செய்து ரெஜிஸ்டர் செய்துவிட்டார். இவருடைய அபிஸந்தியை நன்றாயறிந்த அந்தஸ்வாமியும் இந்தஸொத்து முழுவதையும் தர்மத்துக்கே விநியோகிப்பதாய் நிஶ்சயித்து இதையும் தன்னுடைய ஸ்தாவர ஜங்கம ஸொத்துக்களையும் சேர்த்து அதன்வரும்படிகளைக்கொண்டு தானிருக்கும் வீதியில் ஓர் வேதபாடசாலையை ஸ்தாபித்து அதற்குத்தகுந்த விசாரணைக்கர்த்தர்களையும் ஏற்படுத்தியிருக்கிறார். இப்பொழுதே 8-பிள்ளைகள்சேர்ந்திருப்பதாயும் இன்னம் இதைவிஸ்தரித்து ஸாஹித்யம், சாஸ்த்ரங்கள், முதலானவைகளும் கற்பிக்க ஏற்பாடுசெய்யப் போவதாயும் தெரியவருகிறது. இந்தஸ்வாமி ஏற்கெனவே காஞ்சீபுரம், மதுராந்தகம் முதலான இடங்களில் விசேஷகைங்கர்யங்கள் செய்திருப்பதால் இவரால் ஆரம்பிக்கப்பட்ட இந்ததர்மமும் உத்ஸாஹமாய் குறைவன்றியில் நடந்தேறி வருமென்பதில் சந்தேகமில்லை. இந்த தர்மஸம்பந்தமாய் நிரந்தரமாய் விசிஷ்டாத்வைத ப்ரவசநம் செய்ய ஓர் தகுந்த வித்வானை ஏற்படுத்தவேண்டியதும், பல க்ராமங்களுக்கும்போய் உபந்யாஸங்கள் செய்து ஸ்ரீ பகவத்ராமாநுஜ ஸித்தாந்த ப்ரவசநம் செய்யவேண்டியதற்காக ஒரு வித்வானை நியமிக்கவேண்டியதும் அவச்யம். இந்த உத்தேசங்களை நிறைவேற்ற இன்னும் த்ரவ்யம் வேண்டியதாகையால் இது விஷயத்தில் தனிகர்களின் ஒத்தாசையை இந்தஸ்வாமி அபேக்ஷிக்கிறார்.

விசேஷவிரக்தியுடன் ஸ்ரீ. வாதப்பநாயுடு என்பவர் தன்பூமியைத் தர்மத்துக்கு தானம்செய்ததும், அதைச்சரியாய் விநியோகித்துவர ஸ்ரீ. சடகோபாசார்யர் ஏற்பாடுசெய்து வருவதும் மிகவும் ஶ்லாகிக்கத்தகுந்த விஷயங்களே. இந்தப்பாடசாலை முதலான தர்மங்கள் சரிவரநடந்துவர எல்லா ஆஸ்திகர்களும் சக்த்யநுகுணமாக உபகரித்தால் இந்த தர்மம் ப்ரஸித்தியை யடையும். இதற்குத்தகுந்த தஸ்தாவேஜிகளும் தகுந்த டிரஸ்டிகளும் ஏற்பாடு செய்து சீக்கிரத்தில் ஸ்ரீ. சடகோபாசார்யர் தர்மத்தை ஸ்திரப்படுவோர் என்று நம்புகிறேன்.

ஓர் சபை அங்கத்தினர்.

## (3)

## ஒரு புதிய உபசபை.

ஸ்ரீ வேதாந்த தீபிகை பத்ராதிபருக்கு,

நாளது அற்பசி மீ 4உ ஞாயிற்றுக் கிழமையாகிய அக்டோபர்மீ 20உ விஜயதசமி தினத்தில், மதுராந்தகத்தில் ஸ்ரீ அஹோபில மடத்துச் சிஷ்யர்களின் ஒரு சபை கூடிற்று. அதில் ஸ்ரீ மாந். மாம்பாக்கம், ஆழ்வார் ராமாநுஜாசார்யர் ஸ்வாமி ஸபாத்யக்ஷராய் எழுந்தருளியிருந்தார். சித்தூரிலிருந்து ஸ்ரீ சிஷ்ய சபையின் பொதுக்கார்யதர்சி ஸ்ரீமாந். வி. ராஜகோபாலாசார்யர் ஸபைக்கு வந்திருந்து சபையின் நோக்கங்களையும் வ்யாபாரங்களையும் பற்றி விவரித்துப் பேசி, ஸ்ரீ ஸந்நிதியின் வைபவத்தை ப்ரகாசப் படுத்துவதும் ஸ்ரீராமாநுஜ மதத்தைப் பிரவசனம் செய்வதுமே இந்தச் சபைக்கு முக்கிய உத்தேசங்களென்று வெளியிட்டார். அம்மணம்பாக்கம் ஸ்ரீமாந். விஜயராகவாசாரியர் ஸ்வாமி, இப்பொழுது ஸ்ரீ அழகியசிங்கர் க்ருபையால் திருநாராயண புரத்தில் ஆதிவண்சடகோபஸ்வாமி ப்ருந்தாவநம் திருப்பணி செய்யப் பட்டிருப்பது போல், பலவிடங்களில் மடங்களும், கட்டடங்களும், புதுப்பிக்கப் படுவதை அந்தயந்தமாய் அபேக்ஷிக்கின்றன வென்றும், இதற்கு நிதர்சனமாக த்யாகராஜ புரத்தில் ஸ்ரீமந்நாராயண ஸ்வாமி ப்ருந்தாவநம் பராமர்சிக்கப் படவேண்டியது அவச்யமென்றும், அப்படிச் செய்யாமலிருப்பது தன்னைப்போல் அந்த ஸ்வாமி திருவடிகளில் ஆச்ரயித்த பல பேர்களுக்கும் துக்ககரமாயிருக்கிற தென்றும் விஜ்ஞாபித்தார். அஹோபிலத்தில் ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிஹ்மன் ஸந்நிதிகளின் சிதிலமான ஸந்நிவேசங்கள் முன்னே தயார் செய்யப்பட்ட படங்கள் மூலமாய் வந்திருந்தவர்களுக்குக் காண்பிக்கப்பட்டன. பிறகு வித்வான். ஸ்ரீ திருவேங்கடாசாரியரும் மற்று மெழுந்தருளியிருந்த ஸ்வாமிகளும் மதுராந்தகத்திலும் ஓர் சபையின் பிரிவு ஏற்படவேண்டு மென்று சொல்ல, பின்வரும் தீர்மானங்கள் க்ரமமாய் செய்யப் பட்டு எல்லாராலும் அங்கீகரிக்கப் பட்டன.

(1) மதுராந்தகத்தில் ஸ்ரீ அஹோபில மடத்துச் சிஷ்யஸபையின் ஓர் பிரிவு ஏற்படுத்தப் பட்டது. அதற்கு ஸ்ரீ. அன்னப்பிள்ளை திருவேங்கடாசாரியர் ஸபாத்யக்ஷராகவும், ஸ்ரீமாந் ஆயகம். க்ருஷ்ணஸாமி அய்யங்கார் கார்யதர்சியாகவும் ஏற்படுத்தப் பட்டார்கள்.

(2) அடுத்த சிஷ்யசபையின் மஹாஸங்கம் வரும் டிஸம்பர் மாஸத்தில் மதுராந்தகத்தில் கூட்டப் படவேண்டு மென்றும், அந்தப்படி ஏற்பாடு செய்யச்சபை அத்யக்ஷரிடம் இந்தத் தீர்மானம் தெரியப் படுத்தப்பட வேண்டு மென்றும் தீர்மானிக்கப் பட்டது.

நடந்த ஸபையின் அத்யக்ஷரான ஸ்ரீமாந். ஆழ்வார் ராமாநுஜாசாரியரும் ஸ்ரீமாந் பதல் தீவட்டி. சடகோபாசார்யரும் இந்த மதுராந்தகத்தில் பலகைங்கர்யங்கள் செய்து கோவிலுக்குப் பூமிகளும் ஸமர்ப்பித்திருக்கிறார்கள். இவ்வளவு கைங்கர்யத்திலும் ஸம்ப்ரதாய வ்ருத்தியிலும் ச்ரத்தையும் ஊக்கமுமுள்ள ஸாதுக்கள் வஸிக்கும் இந்தப் புராண ஸ்தலத்தில் அடுத்த மஹாஸங்கம் கூடவேண்டுமென்று செய்திருக்கும் ஏற்பாடு மிகவும் ச்லாகிக்கத் தகுந்ததே. இவ்வளவு ஹிதைஷிகளான ஸ்வாமிகள் அபிஸந்திக்குக் குறைவொன்று மில்லாமல் எல்லாரும் ஐகமத்யமாய் அடுத்த மஹாஸங்கத்தைச் சிறப்புடன் நிறைவேற்றிப் பிரிவையும் மேன்மேல் வ்ருத்தியடையச் செய்வார்களென்பதில் ஸந்தேகமில்லை. அப்படி நடக்க ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிஹ்மன் க்ருபை செய்யவேணு மென்று பிரார்த்திக்கிறேன்.

மதுராந்தகம்.
அற்பசி ௴ 5 உ.

ஓர் மடத்துச் சிஷ்யர்.

---

ஸ்ரீ:

## வேதாந்த தீபிகை ஆபீஸில் கிடைக்கும் புஸ்தகங்கள்.

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| 1. ஸ்ரீ கீதார்த்த ஸங்க்ரஹம்—(ஸ்ரீ. இஞ்சிமேடு- ரங்கநாதாசார்யருடைய தமிழ் வ்யாக்யானத்துடன்) ... ... | 0 | 2 | 0 |
| 2. ஸ்ரீ த்ராவிடவேத தாத்பர்யம்—(ஸ்ரீ. எஸ். கோபாலஸ்வாமி ஐயங்காரால் எழுதப்பட்டுள்ளது) ... ... | 0 | 2 | 0 |
| 3. ஸ்ரீ அஹோபிலமடமும், அதன் ஶிஷ்யர்களின் கர்த்தவ்யங்களும்:—(ஸ்ரீ. டி. ராஜகோபாலாசார்யராற் செய்யப்பட்ட உபந்யாஸம்) ... ... ... ... ... | 0 | 2 | 0 |

வேண்டுமவர்கள் சென்னை, மயிலாப்பூர், கேசவப்பெருமாள் ஸந்நிதி வீதியில் இருக்கும் ஸ்ரீ வேதாந்த தீபிகை மானேஜருக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

ஸ்ரீ:

# பத்ராதிபரின் குறிப்புகள்.

தத்கால ஸங்கங்கள்.

இக்காலங்களில் ஜநங்கள் பற்பலவிஷயங்களில் பற்பல ஸமாஜங்களைச் சேர்த்து ஒவ்வொரு கார்யங்களை நடத்திவருவதை நாம் காண்கிறோம். ஒரேமாதிரியான விஷயத்தில் பின்னபின்னமான அபிப்ராயங்களைப் போஷித்து ஸங்கங்கள் சேருவதையும் காண்கிறோம். இதற்கு உதாஹரணமாக, வித்யை விஷயத்தில் ஸம்ஸ்க்ருதத்தை வ்ருத்திசெய்யவும், தமிழ், தெலுங்கு, கன்னடம், முதலானபாஷைகளை வ்ருத்திசெய்யவும் வெவ்வேறு ஸங்கங்கள் ஏற்பட்டிருக்கின்றன. பொதுவான க்ஷேமங்களை வ்ருத்திசெய்ய ஆந்த்ரர்களும், வைச்யர்களும், ஸாரஸ்வதர்களும், இன்னும் பலகூட்டத்தார்களும் தங்கள் தங்கள் ப்ரத்யேக க்ஷேமங்களையே கருதி கூட்டங்கள் சேருகிறார்கள். இப்படியே மதவிஷயங்களிலும் ஹிந்துக்களும், மகம்மதியர்களும், கிறிஸ்தவர்களும், தங்கள் தங்கள் மதவ்ருத்தியை உத்தேசித்து ப்ரத்யேக ஸங்கங்களைச்சேர்க்கிறார்கள். பொதுவாய் நூறு ஜநங்களானாலும் மற்றவர்களுக்கு ஸம்பந்தமில்லாத ஒருபொது விஷயம் தங்களுக்கு ஏற்பட்டால், அதின் ப்ரகாரங்களை சர்ச்சைசெய்து நிர்ணயம்செய்ய ஸமாஜங்கள் ஏற்படுத்துவதை நாம் பார்த்து வருகிறோம். நம்முடைய விசேஷ ஆதரத்துக்குப் பாத்ரமான ஹிந்துமதத்திலும் இந்தரீதியை அநுஸரித்து ப்ராசீனமான த்வைத, அத்வைத, விசிஷ்டாத்வைத விபாகங்களும், நவீநங்களான ஆர்யஸமாஜம், ப்ரஹ்மஸமாஜம், தியோஸாபிகல்ஸமாஜம், ராமக்ருஷ்ணஸமாஜம், முதலான பலவிபாகங்களும் ஏற்பட்டிருப்பதால், அந்தந்த விபாகத்தார் தங்களுத்தேசங்களை நிறைவேற்ற தனித்தனிக்கூட்டங்களை ஏற்படுத்தி தங்

கள் மதவ்ருத்திக்கு அநுகூலமான கார்யங்களை நிர்த்தாரணஞ் செய்துவருகிறார்கள். இவைகளில் சிலஸமாஜங்கள் ஸாமான்யமாகவும் சிலஸமாஜங்கள் விசேஷாம்சங்களை ஆதரித்தும் ஏற்படுகின்றன. பொதுவாய் வேதங்களையும் ஸ்ம்ருதி புராணங்களையும் நன்றாய் ப்ரசாரணஞ்செய்யவும், அவைகளுக்கநுகுணமாய் அவச்யமான சீர்திருத்தங்களை ஏற்படுத்தவும், ஸம்ஸ்க்ருதத்தினுடையவும் ஹிந்திமுதலான தேசபாஷைகளுடையவும் அப்யாஸத்தை வ்ருத்திசெய்யவும், தேவாலயங்களிலும், மதஸம்பந்தமான மற்ற ஸ்தானங்களிலும் தர்மங்கள் ஸரிவரநடந்து வரும்படியாய் தகுந்த விசாரணைத்திட்டங்களை ஏற்படுத்தவும், வர்ணாச்ரம தர்மங்கள் விதிப்படி நடக்கவேண்டிய ஏற்பாடுகள்செய்யவும், இதுபோன்ற இன்னம் பல நன்மைகளைச்செய்யவும் புதியதாய் ஸ்ரீ பாரத தர்ம மஹாமண்டலம் என்றபெயரால் ஒரு ஸங்கம் உண்டாக்கப்பட்டு சிலகாலமாய் வடதேசத்தில் நடந்துவருகிறது. மேற்கண்ட உத்தேசங்களுடன் ஸம்ஸ்க்ருத பாடசாலைகள் ஏற்படுத்துவதும் இந்த ஸங்கத்தாருக்கு உத்தேசந்தான். இந்த ஸங்கத்தாரால் இங்கிலீஷிலும் ஸம்ஸ்க்ருதத்திலும் பத்ரிகைகள் ப்ரசுரிக்கப்பட்டு வருவதாயும் தெரியவருகிறது.

இப்படிப்பட்ட ஸங்கங்கள் மிகவும் க்ஷேமகரங்களென்பதில் ஆக்ஷேபமில்லை. பலவிஷயங்களில் ஸங்கங்கள் ஏற்படுவது ஐகமத்யத்துக்குப் பாதகமாகுமென்று சிலர் அபிப்ராயப்படுகிறார்கள். ஆகிலும் பரஸ்பர மாத்ஸர்யத்தைவிலக்கி அவரவர்களுக்கு ஹிதமாகத் தோற்றும் விஷயங்களை உத்ஸாஹமாய் கவனித்துவந்தால் எல்லோருக்கும் பொதுவான விஷயங்களிலும் ஐகமத்யமும் உத்ஸாஹமும் ஸித்தமாயுண்டாகும். ஒரு குடும்பத்தில் ஒவ்வொருவருடைய சரீராரோக்யாதிகளை நியந்தாவா யிருப்போன் கவனிக்கவேண்டி யிருப்பதுபோல், அந்தந்த ஜநபாகங்களின் நன்மைகளையும் ப்ரத்யேகமாய் அவரவர்கள் கவனிப்பார்களானால் அதினால் முடிவில் க்ஷேமமே உண்டாகும். இதை உத்தேசித்துத்தான் ஸ்ரீ வைஷ்ணவ ஸாமான்யத்துக்குப் பலவிஷயங்களில் ஹிதகரங்களான அநேக ப்ரவருத்திகள் தற்காலம் அபேக்ஷிதங்

களா யிருக்கச்செய்தேயும், ஸ்ரீ அஹோபிலமடத்துச் சிஷ்யர்களெ ன்னும் பாகத்துக்கு ப்ரத்யேகமான சில சீர்திருத்தங்கள் அந்யயந் தாபேக்ஷிதங்களென்கிற காரணத்தால், ஸ்ரீ அஹோபிலமடத்துச் சிஷ்யஸபை என்கிற ஸங்கம் சேர்க்கப்பட்டு மடத்துச் சீர்திருத் தங்களில் கூடியவரையில் மூன்று வருஷகாலமாய் வ்யாபரித்து வருகிறது. இந்தச் சபைக்கு இப்படி விசேஷோத்தேச மிருப்பி னும், மற்ற ஸ்ரீ வைஷ்ணவர்களுடன் இந்த ஸபையாருக்கும் ஸ்ரீப கவத் ராமாநுஜ ஸித்தாந்தாபிவ்ருத்தி என்கிற ஸாமான்யோத் தேசம் முக்யமாய் வேறொன்றிருக்கிறது. இப்படியே ஒவ்வொரு விசேஷோத்தேசத்தைநாடி ஏற்படும் சபைகளும் மதத்துக்கோ அல்லது தேசத்துக்கோ எது பொதுவான உத்தேசமோ அதை மறக்காமல் தாங்கள் அப்படிப்பட்ட விஷயங்களில் அங்கபூதர் கள் என்பதைக்கவனித்து அதற்கநுகுணமாக நடக்கவேணும். அப் படிச் செய்யும்பக்ஷத்தில் பலசபைகள் ஏற்பட்டாலும் பேதங் கள் வ்ருத்தியடையாமல் ஐகமத்யமே தலைக்கட்டிநிற்கும்.

---

**சிஷ்யஸபையின் அடுத்த மஹாஸங்கம்.**

சிஷ்யஸபையின் அடுத்த மஹாஸங்கத்தைப் பற்றியும் அதற் காகப் பொதுவாய் ஸ்ரீ வைஷ்ணவர்கள் செய் யக்கூடிய ஹிதகரமான வ்யாபாரங்களைப்பற்றி யும் சென்ற ஸஞ்சிகையில் கொஞ்சம் சொன் னோம். சிலதினங்களுக்குமுன் செங்கற்பட்டு ஜில்லா மதுராந்தக மென்னும் ஸ்தலத்தில் மட த்துச் சிஷ்யர்களின் ஒருஸமாஜம் சேர்ந்ததாகவும், அதில் வெகு உத்ஸாஹத்துடன் பல ச்ரத்தையுள்ள ஸ்வாமிகள் கூடியிருந்து சிஷ்யஸபைக்கு மதுராந்தகத்தில் ஒரு உபசபை ஏற்படுத்தி, அதற்கு அத்யக்ஷர், கார்யதர்சி முதலான வ்யாபகர்களை நிய மித்ததாகவும் நமக்குத்தெரியவருகிறது. இந்த சபையில் பொது சபையின் விதிகளும் உத்தேசங்களும் விசாரிக்கப்பட்டு ஒப்புக் கொள்ளப்பட்டு, ஸ்ரீ அழகிய சிங்கருக்கு விரோதமாய் யாதொரு ப்ரவ்ருத்தியும் செய்யாமல் மடத்துக்குவேண்டிய ஹிதவ்யாபா ரங்களைச் செய்வதே சிஷ்யஸபைக்கு யுக்தமான க்ருத்யமென்றும்

அபிப்ராயப்படப்பட்டதாம். இந்த ஸபையின் முக்யமான தீர்மானங்களைப்பற்றி வேறோரிடத்தில் இந்தஸஞ்சிகையில் ஓர்கடிதம் ப்ரசுரித்திருக்கிறோம். அடுத்த மஹாஸங்கம் மதுராந்தகத்தில் சேரவேணுமென்று இந்த உபசபையார்கள் தீர்மானித்திருப்பதாயும் அந்தப்படி பொதுக்கார்யதர்சிக்கு எழுதியிருப்பதாயும் தெரியவருகிறது. இந்த உபசபையாருடைய ச்ரத்தையும் மடத்தின் க்ஷேமத்தில் ஆஸ்தையும் மிகவும் சந்தோஷகரமா யிருக்கின்றன. இந்த உபசபைக்கு ஸ்ரீமாங் அன்னப்பிள்ளை திருவேங்கடாசார்யர் ஸ்வாமி அத்யக்ஷராயும், ஸ்ரீமாங் ஆயனம். க்ருஷ்ணஸாமி அய்யங்கார்ஸ்வாமி கார்யதர்சியாகவும் ஏற்பட்டிருக்கிறார்கள். இந்தச் சபை விசேஷ வ்ருத்தியடையுமென்றும், இவர்களாதரத்தில் மூன்றுவது மஹாஸங்கம் முன்ஸங்கங்களுக்குக் குறைவில்லாமல் இன்னம் அதிக விமர்சையாகவே நடத்தப்பட்டு வருமென்றும் நம்புகிறோம். இதங் விஷயத்தில், ஸ்ரீராமன் கோவில்கொண்டிருக்கிறவும் பெரியநம்பிகள் ஸ்ரீபாஷ்யக்காரருக்கு த்வயோபதேசம் செய்ததால் ப்ரஸித்தி பெற்றதாயுமிருக்கிற ஸ்ரீ மதுராந்தகத்திலுள்ள எல்லா ஸ்ரீவைஷ்ணவஸ்வாமிகளும் ஒன்றுசேர்ந்து, மூன்றுவது மஹாஸங்கத்தை நிறைவேற்றி வைப்பார்களென்பதில் சந்தேஹமில்லை.

அடுத்த மஹாஸங்கத்தில் தகுந்த வித்வான்கள் உபந்யாஸங்கள் செய்யவேண்டியதற்காகக் கார்யதர்சி பலவித்வான்களுக்கு உபந்யாஸங்களைப் ப்ரார்த்தித்துக் கடிதமெழுதுகிறார். இந்தப் பொது கைங்கர்யத்தில் உத்தேசமிருக்கும் வித்வான்கள் ஒருகால் நேரில் ப்ரார்த்திக்கப்படா விட்டாலும் பொதுக் கார்யதர்சிக்காவது சபை அத்யக்ஷருக்காவது தங்கள் விருப்பத்தை தெரிவிப்பார்களானல் அதைப் பெரிய உபகாரமாயெண்ணி அப்படிப்பட்ட உபந்யாஸங்களுக்குக் கூடியவரையில் அவகாசம் ஏற்படுத்தப்படும். இந்த விஷயத்தில் செய்யும் ப்ரார்த்தனை பொதுவாய் எல்லா ஸ்ரீ வைஷ்ணவ வித்வான்களுக்கும் செய்யப்படுகிற தென்பதையும் இதனல் விஜ்ஞாபநம் செய்கிறோம். உபந்யாஸங்களின் ப்ரகாரங்களையும், மகாஸங்கத்தின் மற்ற விவரங்களையும் அடுத்த ஸஞ்சிகையில் விவரிப்போம்.

---

310

# ஸ்ரீ அஹோபில மடத்துச்

## சிஷ்ய ஸபையின்

### நிர்வாஹக கமிட்டியார்.

(1911 - 12.)

ஸ்பாத்யக்ஷர் :— ஸ்ரீ. டி. ராஜகோபாலாசார்யர் எம்,ஏ., பி. எல்.,
சென்னை.

உபஸ்பாத்யக்ஷர் :— ,, வே. க்ருஷ்ணமாசார்யர் பி.ஏ., டிப்டி கலெக்டர்.

கார்யதர்ஶி :— ,, ஸி. ராஜகோபாலாசார்யர் பி.ஏ., பி.எல்., சித்தூர்.

மற்றவர்கள் : ,, வி. ராகவாசார்யர் பி.ஏ., பி.எல்., சென்னை.

,, ,, எஸ். வாஸுதேவாசார்யர் பி.ஏ., எல்.டி., சென்னை.

,, ,, டி. கோதண்டராம ஐயங்கார் பி.ஏ., எம்.எல்.,
தஞ்சாவூர்.

,, ,, எஸ். க்ருஷ்ணமாசார்யர், தஞ்சாவூர்.

,, ,, எஸ். ராஜகோபாலாசார்யர், பி.ஏ., பி.எல்., கடலூர்.

,, ,, எஸ். டி. க்ருஷ்ணஐயங்கார் பி.ஏ., பி.எல்., மதுரை.

,, ,, பி. என். க்ருஷ்ணஸாமி ஐயங்கார் பி.ஏ., பி.எல்.,
கோயம்புத்தூர்.

,, ,, பி. கே. கருடாசார்யர், பி.ஏ., பெங்களூர்.

,, ,, டி. ரங்கஸ்வாமி ஐயங்கார் எம்.ஏ., டிப்டி கலெக்டர்.

,, ,, எம். ஆர். தேஶிகாசார்யர், திருச்சி.

,, ,, எஸ். ஆராவமுது ஐயங்கார், திருக்குடந்தை.

,, ,, க்ருஷ்ண ஐயங்கார், கோமல்.

,, ,, ஆர். நரஸிஹ்மாசார்யர், பி.ஏ., சென்னை.

,, ,, பி. டி. ஶேஷாத்ரியாசார்யர், பாலூர்.

,, ,, ஸி. துரைஸ்வாமி ஐயங்கார், சென்னை.

# The Vedanta Dipika.

## BUSINESS NOTICE.

All Literary communications, letters for publication etc., should be addressed to **The Editor, Vedanta Dipika Office, Mylapore, Madras.**

All other communications, **changes of address**, money orders, etc., should be sent to **The Manager, The Vedanta Dipika, Kesavaperumal Sannidhi Street**, Mylapore, Madras.

**Subscribers who have not paid their subscriptions for the current year are requested to forward the same to the Manager, at their early convenience.**

Intending advertisers are requested to apply to the Manager for terms.

---

ஸ்ரீ

# வேதாந்த தீபிகை

என்னும்

## ஸ்ரீ அஹோபில மட சிஷ்ய சபை பத்ரிகை.

(ஸாதாரண ௵ மாசிமீ ஏற்படுத்தப்பட்டது.)

---

☞ பத்ரிகைக்கு விஷயங்கள் எழுதுவதும் கடிதங்கள் அனுப்புவதும், "பத்ராதிபர், வேதாந்ததீபிகை ஆபீஸ், மைலாப்பூர்" என்று மேல்விலாஸ மெழுதி அனுப்பப்படவேண்டும்.

கட்டணம் கட்டுவதும், விலாஸமாறுதல்கள் அறிவிப்பதும், மற்றெல்லா விஷயங்களும் "மானேஜர், வேதாந்ததீபிகை, கேசவப்பெருமாள் சன்னிதித் தெரு, மைலாப்பூர்" என்கிற விலாஸத்துக்கு அனுப்பப்படவேண்டும்.

நாளது ௵த்திய சந்தாத்தொகையை இதுவரையிலும் செலுத்தாதவர்கள் ஷை தொகையை தாமதமின்றி வேதாந்த தீபிகை மானேஜருக்கு அனுப்ப வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**வருஷம் 1-க்குக் கட்டணம் ரூபாய் 2.**

# பகவத்கீதை தமிழ் மொழிபெயர்ப்பு.

## இதில் அடங்கியவை.

ராமாநுஜபாஷ்யம், தேசிகின் தாத்பர்ய சந்த்ரிகை, ஆளவந்தார் கீதார்த்த ஸங்க்ரஹ ச்லோகம், தேசிகன் கீதார்த்த ஸங்க்ரஹ ரக்ஷை, தேசிகன் கீதார்த்த ஸங்க்ரஹப் பாட்டு.

## இதுவரையிலும் மொழிபெயர்க்கப்படாதவை.

1, 2, 3, 4, 5 ஸஞ்சிகைகள் வெளியாகியிருக்கின்றன.

| | | | |
|---|---|---|---|
| ராயல் 8 பாரமுள்ள ஸஞ்சிகை | 0 | 6 | 0 |
| தபால்கூலி வி. பி. சார்ஜ் உள்பட | 0 | 8 | 0 |
| வருஷச் சந்தா (12 - ஸஞ்சிகை) | 4 | 0 | 0 |
| தபால்கூலி உள்பட | 4 | 12 | 0 |

சிந்தாத்ரிபேட்டை ஸத் ஸம்ப்ரதாய வர்த்தநீ,

34 - அக்ரஹாரம்வீதி சிந்தாத்ரிபேட்டை, சென்னை.

---

ஸ்ரீ:

## வேதாந்த தீபிகை ஆபீஸில் கிடைக்கும் புஸ்தகங்கள்.

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| 1. ஸ்ரீ கீதார்த்த ஸங்க்ரஹம்—(ஸ்ரீ. இஞ்சிமேடு - ரங்கநாதாசார்யருடைய தமிழ் வ்யாக்யாநத்துடன்) ... ... | 0 | 2 | 0 |
| 2. ஸ்ரீ த்ராவிடவேத தாத்பர்யம்—(ஸ்ரீ. எஸ். கோபால ஸ்வாமி ஐயங்காரால் எழுதப்பட்டுள்ளது) ... ... | 0 | 2 | 0 |
| 3. ஸ்ரீ அஹோபிலமடமும், அதன் ஶிஷ்யர்களின் கர்த்தவ்யங்களும்:—(ஸ்ரீ. டி. ராஜகோபாலாசார்யரால் செய்யப்பட்ட உபந்யாஸம்) ... ... ... ... ... | 0 | 2 | 0 |

வேண்டுமெவர்கள் சென்னை, மயிலாப்பூர், கேசவப்பெருமாள் ஸந்நிதி வீதியில் இருக்கும் ஸ்ரீ வேதாந்த தீபிகை மானேஜருக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

---

Printed for the General Secretary, A. M. S. Sabha,
by W. Pushparatha Chetty & Co., K. R. Press, Madras.